ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2269/56 - 2022 මාර්තු මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.03
*2269/56 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆணடின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்டஅறவீட்டு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இத்துடன் உள்ள அட்டவணையின் (i) ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தகப் பண்டங்கள் சம்பந்தமாக அந்த அட்டவணையின் (ii) ஆம் நிரலிலுள்ள நேரொத்த குறிப்புகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதத்தின் அடிப்படையிலான விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டை இதன்மூலம் விதிக்கிறேன்.

இந்தக் கட்டளை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்ற ஒரு வருட காலத்திற்கு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சில்,
கொழும்பு 01,
2022, மாச்சு 03.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *(i) ஆவது நிரல்* | | | | *(ii) ஆவது நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்டம்* | | | | |
| | *இ.மு. தலைப்பு* | *இ.மு. குறியீடு* | *விபரம்* | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *1* | *03.03* | *0303.54* | கானாங்கெழுத்தி (ஸ்கொம்பர் ஸ்கொம்பியூஸ், ஸ்கொம்பர் ஒஸ்ட்ராலஸிகஸ், ஸ்கொம்பர் ஜெபொனிகஸ்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 6.00 |
| | | *0303.55* | ஜெக் மற்றும் ஹோர்ஸ் கானாங்கெழுத்தி (Jack and horse mackerel - *Trachurus spp.l*) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 6.00 |
| *2* | *07.13* | *0713.31.22* | உழுந்து : மேல்தோல் நீக்கப்பட்ட, பிளக்கப்பட்ட அல்லது பிளக்கப்படாத | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 300.00 |
| | | *0713.31.29* | உழுந்து : பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 200.00 |
| *3* | | *0713.35.90* | பிற - கௌபி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 70.00 |
| *4* | *10.08* | *1008.21.10* | விதை - குரக்கன் (இலியூஷன் கொரகான இனம்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 70.00 |
| | | *1008.21.90* | விதை - பிற (தினை) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 70.00 |
| | | *1008.29.10* | பிற - குரக்கன் (இலியூஷன் கொரகான இனம்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 70.00 |
| | | *1008.29.90* | பிற (தினை) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா. 70.00 |

EOG *03 - 0749*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.